**சார்பு நீதிமன்றம், அவிநாசி**

**O.S.No. 444 /2016**

நாள் : 23.02.2023

வா.சா. 1 தனசேகர்

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் சோமனூர் லிட்டரசி மிஷன் என்ற பள்ளியில் படித்தேன். நான் 7-ம் வகுப்பு வரை அந்த பள்ளியில் படித்தேன். என்னுடைய அம்மா வழி தாத்தா ராமசாமி கவுண்டர் வீட்டிலிருந்து 7-ம் வகுப்பு வரை படித்தேன். 12, ஜோதி தியேட்டர் ரோடு, திருப்பூரில் எவ்வளவு காலம் வசித்து வந்தேன் என்றால், நான் அங்கு வசிக்கவில்லை, வேலை செய்து வந்தேன். நான் என் அப்புச்சி வீட்டிலும் தங்குவேன். அம்மா வீட்டிலும் தங்கி படித்தேன். என் தாயாருக்கும், என் தந்தைக்கும் ஆரம்பத்திலிருந்தே பிரச்சினைதான் என்றால் சரியல்ல, 1993 ஆம் ஆண்டிலிருந்துதான் பிரச்சினை. என் தாயார் அதனால் சோமனூரில் அவருடைய தந்தை வீட்டிற்கு சென்று விட்டார் என்றால் சரியல்ல. அவர் என் அப்பா வீட்டிலும் இருப்பார், தாயார் வீட்டிலும் இருப்பார். எனது தகப்பனார் சண்முகசுந்தரசாமி 1/110, குட்டை தோட்டம், கவுண்டம்பாளையம், வேலாயுதம்பாளையம் கிராமத்தில் வசித்து வந்தார் என்றால் சரிதான். 2-ம் பிரதிவாதி செல்லம்மாள் இறக்கும்போது அவருக்கு 103 வயதிருக்கும். என் தந்தை இறப்பதற்கு 3 வருடங்களுக்கு முன்பே பக்கவாத நோயால் பாதிக்கப்பட்டிருந்தார் என்றால் சரியல்ல, இறப்பதற்கு 1½ வருடத்திற்கு முன்புதான் பாதிக்கப்பட்டிருந்தார். என் தகப்பனார் திருப்பூர், ரேவதி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார், பிறகு கே.எம்.சி.ஹெச். மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். 3,4 பிரதிவாதிகள்தான் என் தந்தையாருக்கு சிகிச்சை அளித்து உதவி வந்தார்கள் என்றால், நாங்களும் அவருக்கு சிகிச்சைக்கு உதவி செய்தோம். என் தந்தை உடல்நிலை சரியில்லாமல் பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டிருக்கிறார் என்று எனக்கு தகவல் சொல்லியும், நான் அவரை ஒரு முறை கூட பார்க்கவில்லை என்றாலும், எப்போதும் மருத்துவமனைக்கு உடன் சென்றதில்லை என்றாலும் சரியல்ல. நான் 6 மாதங்கள் மட்டுமே என் தந்தையாருடன் நான் குழந்தையாக இருக்கும்போது வசித்திருக்கிறேன். அதன் பிறகு ஒரு போதும் என் தந்தையுடன் வசிக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்யப்பட்ட போதும் என் தந்தை பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டிருந்தார் என்றால் சரிதான். அவர் கை,கால் வராத சூழ்நிலையிலும், நீதிமன்றத்திற்கு ஆம்னி காரில் வாய்தாவிற்கு வந்திருந்தார் என்றால், அது பற்றி எனக்கு தெரியாது, ஒரு முறை அவ்வாறு வந்திருந்தார். நான் வழக்கு தாக்கல் செய்துள்ள சொத்துக்கள் அனைத்தும் புதுப்பாளையம் கிராமத்தில்தான் உள்ளது என்றால் சரிதான். க.ச.எண்.354 காலையில் 7½ ஏக்கர் பூமி உள்ளது. க.ச.எண்.257-ல் எவ்வளவு விஸ்தீரணம் பூமி உள்ளது என்றால், அதில் எனக்கு பாகம் இல்லை. அதனால் எனக்கு தெரியவில்லை. 274 நெ.காலையில் 4.06 செண்ட் பூமி உள்ளது. 351/3 காலையில் 9 ஏக்கர் 5 செண்ட் பூமி உள்ளது. 355/4 B நெ. காலையில் எனது தந்தைக்குண்டான சொத்து 50 செண்ட் உள்ளது. மேற்படி 50 செண்ட் ஆனது 1.68 விஸ்தீரணத்தில் பொதுவில் உள்ளது என்றால் C

Shedule -ல் அவ்வாறு உள்ளது. மீதம் யாருக்கு உள்ளது என்று எனக்கு தெரியாது. மற்ற நபர்கள் யாருக்கு மீதமுள்ளது என்று தெரிந்து அவர்கள் மீது வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 355/3C காலையில் 29 சென்ட் உள்ளது. இந்த பூமியில் ஒரு ஏக்கர் சுமாராக 5 லட்சம் இருக்கும் என்றால், சொத்தின் சந்தை மதிப்பு எனக்கு தெரியாது. நான் சொத்தில் விவரத்தில் கண்டுக்க சொத்துக்களில் பொதுவில் பாதியை எனக்கு பிரித்து கொடுக்க சொல்லி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என் தந்தைக்கான சரிபாதி சொத்து பாத்தியம் என்றால், நான் அவ்வாறு வழக்கில் குறிப்பிடவில்லை. தாவா சொத்தில் ஒரு பகுதியான க.ச.354 நெ. காலையில் பொதுவில் பாதி (அதாவது புஞ்சை ஏக்கர் 3.75) 2-ம் பிரதிவாதி செல்லம்மாள் ஆயுளுக்கு பின்னிட்டு 1-ம் பிரதிவாதி சண்முகசுந்தரசாமிக்கு அடையத்தக்கதாக குறிப்பிட்டு 05.12.1984 தேதியிட்ட பாகப்பிரிவினை ஆவணத்தில் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1-ம் பிரதிவாதி, 2-ம் பிரதிவாதி இறப்பதற்கு முன்பே இறந்துவிட்டார் என்றால் சரிதான். 2-ம் பிரதிவாதிக்கு, 3,4 பிரதிவாதிகள் தவிர்த்து, அங்காத்தாள் என்ற ஒரு பெண் வாரிசும் உள்ளார் என்றால் சரிதான். அங்காத்தாள் தற்போது உயிருடன்தான் இருக்கிறார். அங்காத்தாளை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். என் தகப்பனார் 3,4 பிரதிவாதிகள் பெயருக்கு வழக்கு சொத்தின் பொதுவில் பாதியை தான செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்துவிட்டார் என்றால், அவர் கூட்டுக்குடும்ப சொத்தை எழுதிக்கொடுத்துள்ளார். அதனால் அந்த தான செட்டில்மெண்ட் என்னை கட்டுப்படுத்தாது. என் தந்தை 13.01.2017-ல் காலமாகி விட்டார் என்றால் சரிதான். செட்டில்மெண்ட் படி தாவா சொத்தில் ஒரு பாதியை 3,4 பிரதிவாதிகள் அடைந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. தற்போதுவரை என் அனுபவத்தில்தான் உள்ளது. 3,4 பிரதிவாதிகள் பட்டாவில் பெயர் மாற்றம் செய்ய ஆட்சேபனை தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். வழக்கு நிலுவையில் இருப்பதால் பட்டா பெயர் மாற்றம் செய்யக்கூடாது என்று ஆட்சேபனை தெரிவித்தேன். 4-ம் பிரதிவாதி 21.03.2019 அன்று இறந்துவிட்டார் என்றால், எனக்கு தேதி நினைவில்லை. 4-ம் பிரதிவாதியின் வாரிசகளை இந்த வழக்கில் நான் கட்சி சேர்க்கவில்லை என்றால் சரிதான். என் தாத்தா ராமசாமி கவுண்டரின் வாரிசு சான்றிதழ் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், எனக்கு வாரிசு சான்றிதழ் கிடைக்கவில்லை. 1-ம் பிரதிவாதி, என் தாயாரை கொடுமை செய்ததாக வழக்கு எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். 1-ம் பிரதிவாதி உயிருடன் இருக்கும்வரை என் தாயார் வாழ்க்கை பொருளுதவி எதுவும் கேட்கவில்லை என்றால், என் தந்தை, என் தாயாரை பராமரித்து வந்தார். அதனால் வாழ்க்கை பொருளுதவி கேட்டு வழக்கு போடவில்லை. 1-ம் பிரதிவாதி இறந்தபிறகு அவருடைய சகோதரியிடமிருந்து ஜீவனாம்சம் கேட்கவில்லை என்றால் சரியல்ல. நான் என் தந்தையுடன் வசிக்காததால்தான், வேறு முகவரியை வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து தவறாக மதிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்து பல கோடி ரூபாய் மதிப்புள்ளது என்றால் சரியல்ல. முழுமையான சொத்துவிவரத்தை வழக்கில் தாக்கல் செய்யவில்லை. முறையான தரப்பினர்களை வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்கான வழக்கு மூலம்

எழவில்லை என்றால் சரியல்ல. 3,4 பிரதிவாதிகள் சட்டப்பூர்வமான ஸ்தீனத்திற்கு எதிராக உறுத்துக்கட்டளை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

*Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.*

K SURESH KUMAR

Digitally signed by K SURESH KUMAR
Date: 2023.02.23 16:14:04 +0530

Subordinate Judge,
Avinashi.